# திருமலையில் ராணுவம்மீது புலிகள்தாக்கு ஆறு சிப்பாய்கள் பலி ஆயுதங்களும் மீட்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாலம் போட்டாறு என்னும் கிராமத்திற்கும் ஜெயபுர இராணுவமுகாமுக்கும் இடையில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலில் 6 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாகியதாக விடுதலைப்புலிகளின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. நேற்று அதிகாலை மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் போது அதிக எண்ணிக்கையான இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் பலர் முகாம்களுக்கு தப்பியோடி விட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின் போது ஸ்ரீ லங்கா இராணுவத்தினரிடம் இருந்து பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு மூன்று ரீ-561, மூன்று ரீ-56II, 21 —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 161 செவ்வாய் 24-07-1990 (ஆடி 8) துல்ஹஜ் 30

### விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலால் திணறும்

# ஆனையிறவு ராணுவம் பரந்தன் சந்தியில் நிலை!

## 15 சிப்பாய்கள் பலி; பலர் படுகாயம் 5 போராளிகள் வீரமரணம்

**கிளிநொச்சி இராணுவ முகாம் நோக்கி வெளியேறிய ஆனையிறவு இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கடும தாக்குதலைச் சமாளிக்க முடியாது பரந்தன் சந்தியிலும், பூங்காவனம் சந்தியிலும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு ஆனையிறவு முகாமில் இருந்தும், உப்பளவிடுதி, உல்லாசப் பயணவிடுதிஆகிய இடங்களில்இருந்தும் இராணுவத்தினர் லக்ஸபானா வீதியூடாக முரசுமோட்டை 2-ம் கட்டைக்கு வரும் போது விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலின் போது 15 இராணுவத்தினர் ஸ்தலத்திலே பலியாகியுள்ளதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் கப்டன் பிபா உட்பட ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தார்கள். டெனா, கிட்டன், முத்து, நங்கப்பன் ஆகியோரே மற்றைய நான்கு போராளிகளாவர்.

இதே வேளை இலங்கைப் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தாக்குதலின்போது ஒன்பது இராணுவத்தினர் பலியாகி 35 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளன.

தற்போது பரந்தன் சந்தியிலும் பூங்காவனம் சந்தியிலும் தங்கியுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் இத்தாக்குதலினால் இராணுவத்தினரின் முன்னேற்றம் முற்றாகத்தடுக்கப்பட்டுள்ளது தொடர்ந்தும் இடம்பெறும் இத்தாக்குதலில் இராணுவத் —04 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி இராணுவஅதிகாரி சினைப்பர் தாக்குதலில் பலி

கிளிநொச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது. சக இராணுவச் சிப்பாய்களுடன் முகாமில் நின்று உத்தரவுகள் பிறப்பித்த போதே இவ்வுயர் அதிகாரி சுடப்பட்டதாக அவ்வட்டார்ங்கள் — 04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தினர் மீது புலிகள் மட்டுநகரில் கிளைமர் தாக்குதல்

மட்டக்களப்பு நாவலடி முச்சந்தி இராணுவ முகாமில் இருந்து ஒட்டமாவடி பாலத்தடிக்கு கவசவாகனங்களுடன் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இக் ''கிளைமர்'' தாக்குதலில் இராணுவத்தினர் முன்னேற முடியாமல் பாரிய இழப்புகளுடன்முகாமுக்குபின் வாங்கிச் சென்றதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (03து

## இரவுநேர விமானக்குண்டு குறிதவறிக் கோட்டையினுள்!

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரு குண்டு கோட்டை இராணுவ முகாமினது காவல் அரண் சுவர்ப்பகுதியில் விழுந்து வெடித்துள்ளது. இதனால் சுவர்ப்பகுதி சேதமடைந்துள்ளது. யாழ்நகரில் இரவு நேரத்தில் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியது இதுவே முதன்முறையாகும். தொலைத்தொடர்பு நிலையத்தின் பக்கமாக உள்ள இராணுவ காவல் அரண் சுவரிலேயே இக்குண்டு விழுந்து வெடித்துள்ளது. இக்குண்டு வை- 8 ரக விமானத்தில் இருந்து வீசப்பட்டதாகும். (3து)

## இராணுவம் ஊர்காவற்படை மீது வவுனியாவில் புலிகள் தாக்குதல்

வவுனியாவில் உள்ள எழக்குளம் என்னும் கிராமத்தில் சிங்கள ஊர் காவற்படையினர் மீதும் இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலையடுத்து இராணுவத்தினர் இழப்புகளுடன் முகாமுக்கு பின்வாங்கியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்

அத்துடன் காமினி மகா வித்தியாலயத்தில் உள்ளஇரா —04 ஆம் பக்கம் பார்க்க

### நபருக்கு கால் இறாத்தல்

## பாண் விநியோகம் நல்லூர் ப. நோ. கூ. சங்கம் மூலம்

சுமார் ஒரு மாத காலமாக தடைப்பட்டிருந்த பாண் விநியோகம் நேற்றிலிருந்து நல்லூர் ப. நோ. கூ. சங்கமூலமாக சுழற்சி முறையில் காலை, மாலல என்ற ரீதியில் கிளைகள் ஊடாக விநியோகம் செய்யப்பட்டன,

இது பற்றி நல்லூர் ப. நோ. கூ. சங்க வட்டாரங்களில் இருந்து கிடைக்கப் 04 ஆம் பக்கம் பார்க்க

## வி. புலிகளுக்கு தி. மு. க. ஆதரவு ராஜீவ்காந்தி கண்டனம்

தமிழீழத்தை அமைப்பதற்காக போராடும் விடுதலைப் புலிகளுடன் தமிழக அரசும் நெருங்கி ஒத்துழைக்கின்றது. என இந்திய எதிர்கட்சித்தலைவர் ராஜீவ்காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ்செயற்குழு கூட்டத்தில் உரையாற்றிய ராஜீவ் விடுதலைப்புலிகள் 04 ஆம் பக்கம் பார்க்க

## லொறி மீது ஹெலி தாக்கு

நேற்று அச்சுவேலிப்பகுதியில் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஹெலியில் இருந்து வீசப்பட்ட ஷெல் ஒன்று லொறி ஒன்றின் மீது விழுந்து வெடித்ததில் லொறி சேதத்திற்குள்ளாகியது இதன் போது பொன்னர் கிருஸ்ணபிள்ளை என்பவர் படுகாயமடைந்தார் (03- து)

## மாங்குளத்தில் ஆயுதம் மீட்பு

மாங்குளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவந்தினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த 17ம்திகதிமேற்கொண்ட தாக்குதலின் போதுமேலும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவிடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

ஆறு ஏ. கே. மகஸின் 203 —04 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதலில் வீரமரணம்

காங்கேசசன்துறை இராணுவ முகாமின் காவல் அரணில் கடமையில் இருந்த விடுதலைப் புலிப் போராளி ஒருவர் இராணுவத்தினரின்சினைப்பர் தாக்குதலில் வீரமரணமடைந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரசன்னா (தயாகரன் புத்தூர்) என்பவரே —04 ஆம் பக்கம் பார்க்க

## வியாழனன்றே கப்பல்

வடபகுதிக்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் வியாழக்கிழமையே பருத்தித்துறைக்கு வந்து சேரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவுக்கான 250 தொன் உணவுப் பொருட்களை இறக்குவதற்குப் பல சிரமங்கள் உள்ள காரணத்திலாலே புதன்கிழமை கப்பல் இங்கு வந்து சேராதென மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (03- து)

## பங்கீட்டுமுறையில் உணவுப் பொருள்

லொறிகள் மூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்த உணவுப் பொருட்கள் யாழ் மாவட்டத்திலுள்ள 23 பல. நோ. கூ. சங்கங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

இவையாவும் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளன சனத்தொகையின் அடிப்படையிலேயே உணவுப்பொருட்கள் சங்கங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (3து)

# பௌத்த சிங்கள இனவெறி

சிங்கள மக்களின் அனைத்து அரசியற் கட்சிகளும், குழுக்களும் எங்ஙனம் இன்று ஈழத்தமிழர்களுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கின்றன?

தமிழ்த் தேசிய இனத்தின்மீது தீராதபகைமை மேற்கொண்டிருக்கும் சிங்கள அரசியற் கட்சிகள், தீவிரவாதக் குழுக்கள் சிங்களச் சமுதாய மத்தியில் எப்படி ஆதரவு பெறுகின்றனர்?

ஆட்சி அதிகாரத்திற்காகப் போரிடும் அரசியல் கட்சிகளிலும் பார்க்க அதிமேலான அதிகாரத்தை எவ்வாறு பௌத்த மதம் சிங்கள மக்கள் மத்தியில் பெற்று நின்று ஸ்ரீலங்காவில் ஆட்சி செலுத்துகிறது?

இலங்கைத் தமிழர்கள் இன்றுவரை அனுபவிக்கும் கொடுமைகளுக்கும் சிங்களப் பௌத்த பேரினவாதமே முக்கிய காரணமாக எவ்வாறு அமைகிறது?

'தாய் நாட்டுப் பாதுகாப்பு' என்பது தமிழ்த் தேசிய இனத்திற்கெதிராகப் போர் தொடுப்பதுதான் என்பதை சிங்கள அரசியல் வாதிகளும், பௌத்தபிக்குமாரும் எவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் வாதிட்டு நிலை நாட்டுகிறார்கள்?

மேற்சொல்லப்பட்ட இன்னோரன்ன வினாக்களுக்கு விடை பகரும் வகையில் சுவீடன் நாட்டிலுள்ள உப்சல பல்கலைக்கழகத்தில் 'மதங்களின் வரலாறு' பற்றிய துறையில் பேராசிரியராகப் பணிபுரியும் பீற்றர் சல்க் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையின் சில முக்கிய பகுதிகளின் தமிழாக்கத்தை முரசொலி வாசகர்களுக்கு தருவதில் மகிழ்ச்சியடைகிறோம். சுமார் இருபது ஆண்டுகளாக ஆசியாவின் மதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து வரும் திரு. சல்க் அவர்கள் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றறிந்த விற்பன்னராவர். திரு. சல்க் அவர்கள் இலங்கை அரசினால் விரும்பத் தகாதவராகக் கருதப்பட்டு அண்மையில் இலங்கைக்கு வர அனுமதி வழங்கப்படவில்லை. பீற்றர் சல்க் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைத்தொடர் நாளைய முரசொலியில் ஆரம்பமாகிறது.

### தமிழகத்தில் தங்கியுள்ள

# அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டும் -ரஞ்சன்

# பாதுகாப்புஇல்லை; அனுப்பமுடியாது-ஆளுநர்பர்னாலா

'இலங்கையில் எமக்கு பாதுகாப்புக் கிடைக்குமென நாம் நம்பவில்லை. இதனால் இலங்கை - இந்திய அரசுகள் எமக்கு சரியான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கும்வரை நாம் மீண்டும் அங்கு திரும்பிச் செல்ல மாட்டோம்'

இவ்வாறு இராமேஸ்வரத்தில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தன்னிடம் தெரிவித்துள்ளதாக தமிழக ஆளுநர் பர்னாலா தெரிவித்துள்ளார்,

இராமேஸ்வரத்திலுள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து தமிழ் அகதிகளைச் சந்தித்ததன் பின்னர் சென்னை திரும்பி பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட்டதன் பின்னரேயே தமிழகத்திலுள்ள அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டுமென ஆளுநர் பர்னாலா தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

இதே வேளை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை முதல்வர் கருணாநிதி திருப்பி அனுப்ப வேண்டுமென மீண்டும் கோரிக்கை விடுத்தார். இங்கு திரும்பிவரும் அகதிகளுக்கு தென்பகுதியிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதுகாப்பு வழங்குவர் எனவும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். (கி)

# இராணுவத்தில் முஸ்லிம் இளைஞர்

இலங்கை இராணுவத்திற்கு கிழக்கிலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் தற்பொழுது சேர்த்துக் கொள்ளப்பட்டு வருகின்றார்கள்.

இராணுவ தொண்டர், நிரந்தரப் படைகளுக்கு முஸ்லிம் இளைஞர்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சை தற்பொழுதுசாய்ந்தமருது அல்ஜியால் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது.

இராணுவத்தில் சேருவதற்கு அதிகளவு முஸ்லிம்கள் ஆர்வம் காட்டி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)

# இரட்டைச் சூட்டடுப்பை பயன்படுத்த ஆலோசனை

விறகுத் தேவையை பெருமளவு தவிர்ப்பதற்கு சிக்கன இரட்டைச் சூட்டடுப்பை பயன்படுத்துமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் விறகின் உபயோகம் மட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. வன வளமும் பாதுகாக்கப்படவேண்டும். அதேவேளை அன்றாட உணவு சமையல் வேலைக்காக நாளாந்தம் மக்களுக்கு பெருந்தொகையான விறகு தேவைப்படுகிறது. இயன்ற அளவு விறகின் தேவையை சிக்கனமாக உபயோகப்படுத்துவதற்கு என தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள சிக்கன இரட்டைச் சூட்டடுப்பு பயனுள்ளதாக மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகிறது.

இந்த அடுப்பின் மூலம் ஒரே முறையில் இரு வேறு சமையல்களைச் செய்ய முடியும். இதனால் விறகின் தேவையில் முப்பது வீதம் குறைகிறது. ஒரே வெப்பத்தில் இரு வேலை முடிகிறது. இந்த அடுப்பை தமிழீழ ஆய்வு நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. மண் சட்டி பானை உற்பத்தியில் ஈடுபட்டு தற்போது வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவும் நிறுவனம் முன் வந்துள்ளது. அடுப்பு உற்பத்தியில் வேலை வாய்ப்புபெற விரும்புபவர்கள் தமிழீழ ஆய்வு நிறுவன அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (கி)

# தொடரும் குண்டுவீச்சால் பலவீடுகள் முற்றாகச் சேதம்

நேற்றுக் காலை 7.30 மணி போல் இடம்பெற்ற குண்டு வீச்சில் யாழ். பத்திரிசியார் கல்லூரி வீதியில் உள்ள பல வீடுகள் சேதமுற்றன. அத்துடன் கூட்டுறவுச் சங்கக் கடை ஒன்றும் சேதமாகி உள்ளது.

பதட்டம் காரணமாக இப்பகுதியில் உள்ள மக்கள் விலைஉயர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இதே வேளை கடந்த ஞாயிறு இரவு நடந்த குண்டு வீச்சில் யாழ். பிரதான வீதியில் பிலிப் நேர்சிங் ஹோம் சுற்றாடலில் சவரிமுத்து மாகிறற், அன்ரனி, பி. ஐ. பர்னாண்டோ, விஜித்தா கபே, ரஷ்தா சலூன், அழகு சயிக்கிள் கடை, ரஞ்சன் கபே, சர்வேஸ்வரன் ஆகியோருடைய வீடு, கடைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

கடந்த 19-ம் திகதி குருநகரில் இடம்பெற்ற குண்டுவீச்சில் சூ. யோசை, துரைராசா, யேசுதாசன் பூபாலசிங்கம், இ. அன்ரனிதாஸ் உட்பட பலரின் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன.

நேற்றுக் காலை நடந்த குண்டுவீச்சில் சம்பத்திரிசியர் கல்லூரிக்கருகில் ஆனந்தன் கிளறிஸ்ரன், விக்ரர் ராஜேஸ்வரி, துரைமெற்றலின், குமார் அஞ்சலின், டேவிட் அலக்ஸான்டர், யேசுதாசன் மறிஸ்ரலா, அலெக்ஸாண்டர் லோயலா ஆகியோரின் வீடுகள் முற்றாகச் சேதமுற்றன (16, 68. கி)

# சீனி விலை குறையும்?

குடாநாட்டுக்கு வெளியிடங்களில் இருந்து கணிசமான அளவு சீனி, சர்க்கரை என்பன வர ஆரம்பித்துள்ளன.

முன்னர் கண்ணால் காண முடியாதிருந்த சீனி, தற்பொழுது பொது இடங்களில் கிலோ 65 ரூபா முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

சில தினங்களாக சீனி, சர்க்கரை என்பன இங்கு கொண்டு வரப்படுவதினால் சீனியின் விலை மேலும் குறையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (கி)

### சபையில் வாசுதேவா குற்றச்சாட்டு

# பிரபாகரன் அல்ல அரசதலைவர்களே இன்றைய மோதல்களுக்கு காரணம்

தற்பொழுது நடக்கும் மோதல்களுக்கான பொறுப்பாளி பிரபாகரன் அல்ல- பிழையான முடிவுகளை எடுத்து வரும் இந்த அரசும் தலைவர்களும்தான் முதல் பொறுப்பாளிகள்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீது உரையாற்றுகையில் ஐக்கிய சோஷலிச அணி எம். பி. வாசுதேவ நாணயக்கார இப்படித் தெரிவித்தார்,

வடக்கு கிழக்கில் இன்று அரசு யுத்தமொன்றை நடாத்திக் கொண்டிருக்கிறது. கண்டவுடன் சுடும் யுத்தமாக இது அங்கு நடக்கிறது. விடுதலைப்புலிகளை அடக்க இராணுவத்தை நாம் பயன்படுத்துகின்றோம். ஆனால் இது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாறி வருகின்றது.


வடக்கு கிழக்கில் சண்டை நடைபெறும் பகுதிகளைப் பிடித்துக்கொள்வது கஷ்டம். இறுதியாக அரசியல் தீர்வொன்றின் மூலமே தீர்வைக் காண முடியும் என வடபகுதிக்குப் பொறுப்பான இராணுவத் தளபதி கொப்பேகடுவ கூறியிருக்கிறார்.

தற்போது நடைபெறும் யுத்தம் நாட்டின் ஐக்கியத்தையும், வளத்தையும் முற்றாகவே அழித்துவிடும். இது இறுதியில் அந்நிய தலையீட்டுக்கே வழிவகுக்கும் எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியிருக்கிறார். (கி)

இன்றைய நிலையில்
உங்கள் தேவையை
பூர்த்தி செய்ய
பொபி சோடா
பொபி நெல்லிரசம்
பொபி
இன்டஸ்றீஸ்
கண்டி வீதி
கைதடி, நுணாவில்
03739

விற்பனைக்கு
பனம் பொருட்கள், புழுக்கொடியல் மா, ஒடியல்மா என்பன எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா கோப்பிக்கடை
திருநெல்வேலி. (07033)

## 36-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### இராமச்சந்திரன் விக்னேஷா (விக்கி, கும்பன்)

தாயின் மடியில் 3. 11. 1972

தாயக மீட்பில் 20. 06. 1990

கோட்டை வாசலில் களம் அமைத்துப் போர்புரிந்து வீரசுவர்க்கம் எய்திய வீரவேங்கையே விக்னேஷா!
நீ சிந்திய குருதியிலிருந்து ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றுவர்
உன் இலட்சியம் ஈடேற அவர் உழைப்பர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி. இன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் பங்குபற்றி விக்னேஷாவின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்படி பணிவன்புடன் வேண்டுகிறோம்.

பெற்றார், உறவினர், நண்பர். 24. 7. 90

நாவலர் சனசமூக நிலையம்
பறாளாய் வீதி, சுழிபுரம்
07044

ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடந்த ஒருமாத காலத்தில் மட்டும்

# மூந்நூறு தமிழ் அகதிகள் கடலில் சுட்டுக்கொலை

இலங்கையின் வடக்குக், கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழகத்திற்கு படகுகளில் தப்பிச் செல்வோர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் தாக்குதலினால் இதுவரை முந்நூறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன்மாதம் பதினோராம் திகதிக்குப் பிறகு தமிழகத்தை நோக்கிச் சென்றோரே இவர்களாவர்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில்;கடந்த ஜூன் பதினோராம் திகதிக்குப் பின்னர் மட்டும் படையினரின் தாக்குதலினால் சுமார் இரண்டாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்குக், கிழக்குப் பகுதியில் உளள தமிழ் மக்களை இலங்கை அரசு திட்டமிட்ட அடிப்படையில் பட்டினிபோட்டு கொல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக லண்டனில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வடக்குக், கிழக்கில் தற்பொழுது எட்டு லட்சம் அகதிகள் உள்ளனர். இவர்களுக்கு உணவுப் பொருட்களை அனுப்பாமல், அனுப்ப முடியாமல் கடந்த ஒருமாத காலமாக இலங்கை அரசு தடுத்து வருகின்றது. இதன்மூலம் தமிழ் மக்களை பட்டினி போட்டு சாகடிக்கத் திட்டமிட்ட அடிப்படையில் முயற்சியெடுக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (கி)

## தமிழகம் தப்பிச்செல்ல மன்னாரில் 20,000பேர் தவம்

தமிழகத்திற்கு தப்பிச்செல்வதற்காக மன்னாரில் சுமார் இருபதினாயிரம் அகதிகள் படகுகளுக்காகக்காத்து நிற்கிறார்கள்.

இப்படி ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை. இலங்கைக் கரையில் காத்துநிற்கும் தமிழ் அகதிகளை தமிழகத்திற்கு அழைத்துவர கப்பல அனுப்புவது பற்றி மத்திய அரசு முடிவெடுக்க வேண்டுமென தமிழக ஆளுநர் பர்னாலா தெரிவித்திருக்கிறார். (கி)

## கேர்ணல் அறிவிப்பு

வவுனியா அரச ஊழியர்கள் 30ம் திகதிக்கு முன்னர் கடமைக்குத் திரும்பவேண்டுமெனவும், தவறினால் அவர்கள் தமது பதவிகளை இழந்தவர்களாகக் கருதப்படுவார்களெனவும் வவுனியா இணைப்பதிகாரி கேர்ணல் இரத்னாயக்கா அறிவித்துள்ளார். (கி)

## நேற்றுக்காலை 6 மணிமுதல் கிளிநொச்சியில் ஊரடங்கு

கிளிநொச்சி நிருவாக மாவட்டத்தில்நேற்றுக்காலை ஆறுமணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த ஊரடங்கு உத்தரவு எப்போது நீக்கப்படும் என்பதுபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஊரடங்குச் சட்டத்தை மீறுவோர் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாகக் கருதப்பட்டு, சுட்டுக்கொல்லப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இராணுவ நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவே நேற்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது (கி)

## ஆடு நனைகிறதேயென்று...

வவுனியா நகரிலிருந்து மக்கள் வெளியேறியுள்ளதனால் அங்குள்ள வீடுகளிலும், கடைகளிலும் கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருகின்றார்கள்.

இப்படி கவலைப்படுகிறார் இராணுவ உயரதிகாரியொருவர்.

இதனைத் தடுக்க வவுனியாவிலிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். (கி)

## நீரில்லை... பயிர்கள் கருகின

தீவுப்பகுதியில் பெருமளவு பயிரினங்கள் நீர் இறைப்பின்றி அழிந்துள்ளன. இங்கு ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். (ப-12 கி)

## ‘கற்பகத்தில்’ துரித விற்பனை

அல்வாய் மாலி சந்தியில் உள்ள ‘‘கற்பகம்’’ விற்பனை நிலையத்தில் அமோக விற்பனை நடைபெற்று வருகிறது. தற்போதைய உணவு நெருக்கடி காரணமாக மக்கள் பனம் பொருட்களை வாங்கத் தொடங்கி உள்ளனர். யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள இந்நிலையம் வடமராட்சிப் பகுதிக்கான ஒரே நிலையமாக இருக்கிறது. ஒடியல் மா, புழுக்கொடியல் மா,பனம்பாணி, பனம்ஜாம், புழுக்கொடியல், பனம்ரொபி போன்ற பொருட்கள் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. (17கி)

## படகு சேதம்

(வல்வெட்டித்துறை)

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பருத்தித்துறைக் கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்டிருந்த ஓர் பெரிய மீன்பிடிப் படகை நோக்கி கடற்படைக் கப்பல்கள் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் அப்படகு தீப்பிடித்து முற்றாகச் சேதமடைந்துள்ளது. (22-கி)


## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

1983 இருண்ட ஆடிக்கலவரத்தின்போது மானிப்பாயில் அகால மரணமடைந்த யா/ சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவனும் யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவனும் ஆகிய

மகாதேவா இராஜகாந்தன்
(பவுண்)

தோற்றம்:
26-03 1964



மறைவு:
24-07-1983


அன்புடன் நினைவு கூரும்

அம்மா, தங்கை.

வடக்கு, சண்டிலிப்பாய்.

07043


## களம் பல கண்ட யாழ். கோட்டை (16)




1987 இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை தீவிரமாகியது. கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களுடன் பொம்மர் விமானங்களும் ஹெலிகப்ரர்களும் யாழ்ப்பாண நகரத்தை அழிப்பதில் ஈடுபட்டப்பன. ஏராளமான கட்டிடங்கள் அழிந்தன. கோட்டையைச் சுற்றியுள்ள கட்டிடங்கள் பலவும் அழிந்தன. இராணுவம் வந்து தங்கிவிடலாம் எனக் கருதப்பட்ட பெரிய தபாற்கந்தோர் வீரசிங்கம் மண்டபம் என்பன பொருட்கள் அகற்றப்பட்ட பின்னர் போராளிகளால் தீயிட்டு அழிக்கப்பட்டன. றீகல் தியேட்டர், நீதிமன்றங்கள், மாநகரசபை, சுப்பிரமணியம் பூங்கா என்பன கோட்டை இராணுவத்தினராற் சேதமாக்கப்பட்டன.

கோட்டையைச் சுற்றியுள்ள இரண்டு சிறிய இராணுவ முகாம்கள் விடுதலைப்புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை. கோட்டைக்கு மேற்குப் பக்கத்திலுள்ள பொலிஸ் விடுதிகளில் இராணுவம் மினி முகாம் ஒன்றினை அமைத்திருந்தது. 22 மார்ச் 1987இல் அதிகாலை அந்த முகாமை விடுதலைப் புலிகள் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர். கடும் காயமடைந்த 13 பேரில் ஐவரை அங்கேயே விட்டுவிட்டு 8 பேரைக் கைது செய்து அழைத்து வந்தனர். ஏராளமான ஆயுதங்கள் புலிகளுக்குக் கிடைத்தன. ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பறேசன் லிபறேசன் நிகழ்ந்தது. இந்திய அரசினால் மேற்

★ செங்கை ஆழியான்

கொள்ளப்பட்டஒப்பறேசன் பூமாலை முடிந்திருந்தவேளையில் 1.ஜூன் 1987 அன்று அதிகாலை யாழ்ப்பாணம் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்த ஸ்ரீலங்கா மினி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் பயங்கரமான தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டனர். சக்தி வாய்ந்த குண்டுகள் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்று இந்த முகாமிற்குள் கொண்டு செல்லப்பட்டு வெடிக்கப்பட்டது. மூன்று இராணுவத்தினர் சரண் அடைந்தனர். ஏனையோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். முருகதாஸ் (நிக்ஸன்) என்ற போராளி இந்தச் சண்டையில் மரணமடைய நேரிட்டது. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில் 29 ஜூலை, 1987இல் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தது. 3, ஓகஸ்ட் அன்று விடுதலைப் புலிகளின் அனுமதியுடன் இந்திய அமைதிப்படை, யாழ்ப்பாணம் கோட்டைக்குள் பிரவேசித்தது. இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறும் வரை யாழ்ப்பாணம் கோட்டை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை, 11 ஜூன் 1990இல் முறிவடைந்தது. யுத்தப்பிரகடனம் செய்யப்பட்டது. மீண்டும் அன்றிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருக்கின்றது. அம்முற்றுகை தொடர்ந்து நிகழ்கின்றது.

களம் பல கண்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்னமும் எவ்வளவு உயிர்ப்பலிகளை எடுக்கக் காத்திருக்கின்றதோ? யாரறிவர்.

இக்கட்டுரைக்கான ஆதாரங்கள்:-


1. யாழ்ப்பாணச் சரித்திரம் எஸ். கோன்
2. யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
3. யாழ்ப்பாணச் சரித்திரம் - செ. இராசநாயகம்
4. யாழ்ப்பாண இராச்சியத்தின் கதை - க. குணராசா
5. நல்லைநகர் நூல் - க. குணராசா
6. A true and exact description of the great Island of Ceylon - Phillip Baldeaus.
7. The temporal and spiritual conquest of ceylon-queyroz.
8. The kingdom of Jaffna - S. Pathmanathan.
9. The northen kingdom - S. Nadesan
10. Ribeiro's history of ceilao.
11. The dutch powerin ceylon - peries. P. E.
12. The fort of Jaffna - C. V. Belamy.
13. North ceylon in dutch times - S. Arasaratnam.
14. Judgement ofthe criminal Justice Commission - 1976.


(முற்றும்)

# விடுதலைக்குப் பின்னரும் ஆயுதம் இருக்கு

# செல்லக்கிளி நினைவுக் கூட்டத்தில் யோக

''திருநெல்வேலியில் அன்று ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு எதிராக எங்கள் கெரில்லாத் தலைவன் செல்லக்கிளி தாக்குதல் மேற்கொண்டபோது விடுதலைப் புலிகள் முப்பது பேர் கொண்டவர்களாகவே இருந்தார்கள், அந்தத் தாக்குதலில் பதின்மூன்று சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். 1983ம் ஆண்டு ஜூலை மாதம் 23ம் திகதி இனவெறி பிடித்த சிங்களப் படையினருக்குவிழுந்த முதலாவது அடி அதுவாகும். அந்தத் தாக்குதலில் செல்லக்கிளியோடு பங்காற்றிய மாவீரர்கள் ரஞ்சன்- விக்டர்- புலேந்தி- அம்மான்- சந்தோசம்- கணேஸ்- பொன்னம்மான் போன்ற போராட்ட வீரர்கள் இன்று எம்மோடு இல்லை. செல்லக்கிளி ஒரு சிறந்த போராட்டத்தலைவன் மட்டுமல்ல மிகவும் சாதுர்யமான மதி நுட்பத் திறமைவாய்ந்தவனும் கூட. பல தடவைகளில் எதிரிப் படையினர் செல்லக்கிளியிடம் ஏமாற்றமடைந்ததுண்டு. தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் அவர் இருக்க வேண்டியவர்.

மறைந்த் விடுதலைப்புலிகளின் கெரில்லாத் தலைவன் லெப்டினெண்ட் செல்லக்கிளி (சதாசிவம்செல்வநாயகம்)யின் 7 வது நினைவு தினமும் உருவப்பட திறப்பு நிகழ்ச்சியும் கல்வியங்காடு சந்தை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற போது அதில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் (யோகி) இவ்வாறு குறிப்பிட்டார். நல்லூர் வட்ட அவை செயலாளர் திரு. புவேந்திரராசா கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

திரு. செல்லக்கிளியின் உருவப்படத்தை திரு. பேபி சுப்பிரமணியம்(பேபி அண்ணா) திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. யோகி, ''எமக்கு விடுதலை கிடைத்தாலும் ஆயுதத்தை நாங்கள் கூடவே வைத்திருப்போம். ஆயுதம் எம்மோடு என்றும்இணைந்தே இருக்கும். அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகள் ஆயுதங்களைக் களைந்து விட்டு பேச்சுக்கு வாருங்கள் என தங்களுக்கு எதிராகப் போராடும்அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கின்றன. ஊர்காவல் படைகளையும் மற்றும் பல ஆயுதப்படைகளையும்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசு எங்களை ஆயுதங்களை வைத்து விட்டு வாருங்கள் எனக் கேட்கிறது. எங்கள் பாதுகாப்புக்கு ஆயுதம் தேவை. ஆயுதமின்றி நாங்கள் எங்கள் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியாது. பல நாடுகளில் தங்கள் உ[...]மைகளுக்காகப் போராடி கொண்டிருக்கும் பல போரா[...]ட்ட அமைப்புக்கள் எங்கள[...] தங்களின் உந்துசக்தியாக[...] கருதி எங்களின் கட்டுக்கோப்பான வீர தீரம் மிக்க போர் முறைகளைப் பார்த்துவியந்து கொண்டிருக்கின்ற'னஎன்றார்

விடுதலைப் புலிகளின் மாணவ அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதி, திரு. க. செல்வநாயகம், திரு. ஆஞ்சநேயர், திரு ரங்கன் மற்றும் பலரும் உரையாற்றினார்கள். (53-து)

## ராஜீவ் - ஜெயவர்தனா ஒப்பந்தம்
### அவர்களினாலேயே நிறைவேற்ற முடியவில்லை
### முதலமைச்சர் மு. கருணாநிதி

இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்படும் எனக்கூறி கொழும்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிஜெயவர்த்தனாவும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தம் அவர்களின் பதவிக் காலத்திலேயே நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதை ராஜீவ் காந்தியும் நன்கு உணர்வார். இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் ஈழத்தமிழர்களுக்கு இந்தியாவில்உள்ள மாநிலங்களுக்கான அதிகாரத்தை விட அதிக அதிகாரங்களை வழங்கும் என ராஜீவ் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார். ஆனால் அம்மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கூட அப்படியான எந்தவித அதிகாரங்களும் அவ்வொப்பந்தத்தில் இல்லை என பகிரங்கமாக ஒரு தடவை கூறியுள்ளார் எனவும் முதலமைச்சர் கருணாநிதி சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் தமிழ் நாட்டில் உலாவுவதாக பாரதீய ஜனதாக் கட்சி கற்பனைக்கதைகளைத்தான் கட்டவீழ்த்து விடுகிறது இது குறித்து விரிவாக விளக்குவதற்கு எனக்கு அவசியமில்லை என முதலமைச்சர் கருணாநிதி நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (து

### இலங்கை அரசூடாக வழங்க மறுப்பு
## வடக்கு கிழக்கிற்கு பிரிட்டிஷ் உதவி அரச சார்பற்ற நிறுவனம் ஊடாக

வடக்கு, கிழக்கில் தற்போது நடக்கும் யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பிரிட்டிஷ் அரசு இரண்டு கோடி ஐம்பது லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

இத்தொகை இலங்கை அரசிடம் வழங்கப்படாது. நேரடியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யுனிசெப், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படும் என பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## நேற்றும் நகரில் விமானத்தாக்கு குருநகரில் பல வீடுகள் சேதம்

யாழ். கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று நண்பகல் பொம்மர் விமானங்களும் வை-8 ரக இத்தாலிய விமானங்களும் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

ஒரு குண்டு குருநகர் சனசமூக நிலையத்திற்கு முன் உள்ள ஜெயசீலன் என்பவரது வீட்டின் மேல் விழுந்து வெடித்தது இதனால் அப்பகுதியில் உள்ள பத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. ஒரு வீட்டில் இருந்த சைக்கிள் ஒன்று இக்குண்டின் அதிர்வினால் 50 யார்களுக்கு அப்பால் சென்று விழுந்துள்ளது,

மற்றைய குண்டுகள் விடுதலைப் புலிகளின் சென்றிப் பகுதிகளை நோக்கியே வீசப்பட்டன. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. காலையில் நடைபெற்ற குண்டு வீச்சு விபரம் உள்ளே.

03-68-து

## நேற்றும் 700 அகதிகள்

நேற்று இந்தியாவுக்கு இருபத்தி மூன்று படகுகளில் எழுநூறுஇலங்கை அகதிகள்சென்றடைந்ததாகசென்னைச்செய்திகள் தெரிவிக்கின்றன. (து

### சமுகம் தரவும்

யாழ். முறை சாராக்கல்விப் பிரிவின் மோட்டார் றீவைண்டிங், மின்உபகரணம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளைக் கற்று வெளியேறிய மாணவர்களும் தற்போது கற்றுவரும் மாணவர்களும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் கொடுக்கும்படி இப்பயிற்சி நெறியின் போதனாசிரியர் கேட்டுள்ளார். (03-து

### வி. புலிகள்...

இந்தியாவின் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் ஆந்திரத்தீவிரவாதிகளுக்கும் ஆயுதங்கள் வழங்குகின்றனர் தமிழக கடற்கரை புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இன்னும் இருக்கிறது எனவும் மேலும் தெரிவித்தார். (து)

### பாண்...

பெற்ற தகவல்களின்படி அண்மையில் மதவாச்சியில் இருந்து தருவிக்கப்பட்ட மா பெருமளவில் பாண் உற்பத்தியை மேற்கொண்ட பேக்கரிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு, தற்பொழுது சங்கக் கிளைகள் ஊடாக, தனிநபர் ஒருவருக்கு தலா கால் இறாத்தல் வீதம், குடும்ப அட்டையில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப விநியோகம் செய்யப்படுவதாக அறியப்படுகின்றது. (66-து)

### கிளிநொச்சி...

மேலும் தெரிவிக்கின்றன.

கடந்த வாரமும் கிளிநொச்சி இராணுவ முகாமிற்கு வெளியே வந்த இராணுவ அதிகாரி புலிகளின் சினைப்பர் தாக்குதலுக்கு பலியானமை இங்குகுறிப்பிடத்தக்கது. (3து)

## திருமலையில் பெண்கள்மீது 'ஜிகாத்' பலாத்காரம் சிறுவர் காதுகளில் கம்பிஏற்றிச் சித்திரவதை

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து தம்பலகாமத்தில் தஞ்சம் அடைந்திருந்ததமிழர்கள் பலர் 'ஜிகாத்' இயக்கத்தினர் உதவியுடன் இலங்கை இராணுவத்தினரால்சித்திரவதைக்குஉள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து தப்பி வடமராட்சி கிழக்குப்பகுதிக்கு வந்தடைந்த ஒருவர் தெரிவித்தார்

இளம்பெண்கள் குழந்தைகள் ஆகியோரின் காதுகளில் சைக்கிள் கம்பி ஏற்றப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், பலர் இச்சித்திரவதைகளினால் கொல்லப்பட்டதாகவும், இளம்பெண்கள் பலர் 'ஜிகாத்' இயக்கத்தினரால்.மானபங்கப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

தம்பலகாமம் தமிழ்க் கிராமத்தில் புகுந்த 'ஜிகாத்'இயக்கத்தினர், தமிழ் மக்களைத் துன்புறுத்தி நீங்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களா? எனக்கேட்டு அவர்களைச் சித்திரவதைக்கு உட்படுத்தியதாகவும் அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் நடைபெற்ற முற்றுகையின்போது இராணுவத்தினரினதும் ஜிகாத் இயக்கத்தினரினதும்கைகளில்பெண்களும் குழந்தை களுமேபெரும் பாலும் அகப்பட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (43 கி து)

### ஆனையிறவு...

தினர் பொம்மர்களையும் ஹெலிகளையும் பயன்படுத்தி வருகின்றார்கள் எனினும்இவ்ராணுவத்தினரைமுன்னேறவிடாதுவிடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் உள்ள மக்கள் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, இராமநாதபுரம், உருத்திரபுரம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

03.து

### இராணுவம்...

ணுவத்தின் மீதும் நேற்றும் விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகவும் சேதவிபரங்கள் அறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம் முகாமுக்கு அருகில் உள்ள குருமன்காடு, வைரவப் புளியங்குளம், கரப்பன்காடு, ஸ்ரேசனடி யூ. சி. விடுதி ஆகிய கிராமங்களில் இருந்து மக்கள் அகதிகளாக வெளியேறியதையடுத்து அப்பகுதி வீடுகள் கொள்ளையிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுடது. (03-து

### மாங்குளத்தில்—

ஷெல் ஒன்று ஐ. எம் ரவைகள் 90 ஆகியவைகளே மேலும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாகும் என தெரிவிக்கப்பட்டது. (03- து)

### சினைப்பர்—

வீரமரணமடைந்தவராவர். இதேவேளை யாழ்கோட்டை இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில் காயமடைந்த அமுது (ஜயா சாமி ராசா பருத்தித்துறை) என்பவர் நேற்று வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

(03- து)

### திருமலையில்...

ஏ. கே மகஸின்கள், 500 ஐ. எம். ரவைகள், எட்டு ஜே ஆர். கிரனைட் ஆறு கோல்ஸர்கள், ஐந்து தலைக் கவசங்கள். போன்றவை களே இத் தாக்குதலில் புலிகளாள் கைப்பற்றப்பட்டது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (03-து)

## கிளிநொச்சியில் தொடர்ந்து ஊரடங்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றும் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது (து

### தாயக மீட்புநிதி

தாயக மீட்பு நிதிக்கென வழங்குவதற்கு பவுண் கைவசம் இல்லாத பொது மக்கள் அதற்குப் பதிலாக 10 ஆயிரம் ரூபாவை வழங்கலாம் தாயக மீட்பு நிதிக்காக பவுண் வாங்க வரும் குழுவினர் பவுண் இல்லாதவர்களிடம் பவுணுக்கு பதிலாக 10 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்வார்கள் என அறியத்தருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில் உள்ள அச்சகத்தில் 24-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது,